அவசர கூட்டம் எண்.02/2019 நகரமன்றம் போ்ணாம்பட்டு.

நாள்.18.02.2019

அறிவிப்பு

2019–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18–ம் தேதி திங்கட் கிழமை பிற்பகல் 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகராட்சி தனி அலுவலர் அவர்கள் அறையில் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள பொருள்களை முடிவு செய்ய நகரமன்றத்தின் அவசரக் கூட்டம் நடைபெறும்.

**முன்னிலை : திரு.ச.செல்வபாலாஜி.,(கூடுதல் பொறுப்பு) மற்றும் தனி அலுவலர்**

**பொருள் எண்: 1**

இந்நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையத்தில் 2019–2022 என்ற மூன்றாண்டு காலத்திற்கு சுங்கம் வசூல் செய்யும் உரிமத்திற்கு குத்தகை பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி 15.02.2019ம் தேதியன்று கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளி/ ஏலத்தொகை கீழ்கண்டுள்ளவாறு வரப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ) ஒப்பந்தப்புள்ளி யாரும் அளிக்கவில்லை.

ஆ) ஏலம் கோரப்பட்ட விவரம் கீழ்கண்டுள்ளவாறு

| வ.எண் | ஏலம் கோரப்பட்டவர்கள் பெயர் மற்றும் விலாசம் | உயர்ந்தப்பட்ச ஏலத் தொகை |
|---|---|---|
| 1. | த.முத்தரசன் | 327000 |
| 2. | மா.சிவாஜி | 328000 |
| 3. | கே.சிவக்குமார் | ஏலம் கோரவில்லை |
| 4. | எ.பெண்ணரசி | 330000 |
| 5. | இஸ்தியாக்அஹ்மத் | 326000 |
| 6. | என்.எஸ்.பாபு | 331000 |

2018–2019ம் ஆண்டு குத்தகை தொகை ரூ.303188/–

மூன்று ஆண்டு சராசரி குத்தகை தொகை ரூ.288980/–

மேற்படி ஏலம் கோரியதில் உயர்ந்தப்பட்ச ஏலதாரர் திரு.என்.எஸ்.பாபு என்பவரின் உயர்ந்தபட்ச ஏலத்தொகையான ரூ.331000/– என்பது கடந்த ஆண்டு ஏலத்தொகை ரூ.303188/–ஐ விட ரூ.27812/– அதிகமாகவும், மூன்றாண்டு சராசரியை விட ரூ.42020/– அதிகமாகவும் உள்ளது. எனவே, உயர்ந்தப்பட்ச ஏலம் கோரிய திரு.என்.எஸ்.பாபு என்பவரின் உயர்ந்தப்பட்ச ஏலத்தொகையை ஏற்று உத்திரவு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

திரு.என்.எஸ்.பாபு என்பவரின் உயர்ந்தப்பட்ச ஏலத்தொகை ரூ.331000/– ஏற்று உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். / 2019/சி1

**தீர்மானம் எண். 425**

**அனுமதிக்கப்பட்டது**